| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| முகாம் அலுவலர், | சார்ந்த மேல்நிலைப்பள்ளி |
| முகாம் எண்.70 அரசினர் மகளிர் | (அரசு / நிதியுதவி பெறும் பள்ளி) தலைமை |
| மேல்நிலைப்பள்ளி, நடுப்பேட்டை, | ஆசிரியர்கள் மற்றும் வட்டாரக் கல்வி |
| குடியாத்தம், வேலூர் மாவட்டம் | அலுவலர்கள், வேலூர் மாவட்டம். |

ந.க.எண்.0001/2024 நாள்.01.04.2024

-----

பொருள் அரசுப் பொதுத் தேர்வுகள் – 2023-2024 – விடைத்தாட்கள் மதிப்பீட்டுப் பணி – மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு விடைத்தாட்கள் மதிப்பீட்டு பணி – ஆசிரியரல்லாத பணியாளர்கள் - பணியிலிருந்து விடுவிக்கக் கோருதல் – சார்பு

பார்வை சென்னை, அரசு தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.0017181/எச்2/2023 நாள்.28.03.2024

-----

2023-2024ஆம் கல்வியாண்டு மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் விடைத்தாள் மதிப்பீட்டு முகாம் மைய எண்.70, நடுப்பேட்டை, குடியாத்தம், அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்கு 01.04.2024 முதல் ஆசிரியரல்லாத பணியாளர்கள் இணைப்பில் காணும் விவரப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, 01.04.2024 அன்று காலை 9.00 மணிக்கு நடுப்பேட்டை, குடியாத்தம், அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு முகாம் பணி மேற்கொள்ள வருகை புரியும் வகையில் சார்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களை பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு சார்ந்த அரசு / நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு
விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு நியமனம்
செய்யப்பட்டுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்கள் விவரம்

//ஒப்பம்//
முகாம் அலுவலர்

நகல்

1. சென்னை, அரசு தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.